செ. கு. எண்: 169 நாள் :02.12.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 2.12.2015

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 19.11.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், கொளத்தூரைச் சேர்ந்த திரு. மாலக்கொண்டைய்யா என்பவரின் மகன் ஆனந்தன்;

29.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், கருக்காமலை கிராமத்தைச் சேர்ந்த திரு. கன்னியப்பன் என்பவரின் மகன் சரவணன் ஆகிய இருவரும் கால்வாயில் தவறி விழுந்து உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

27.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அத்தியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. துரைசாமி என்பவரின் மனைவி துளசி;

30.11.2015 அன்று சாலபோகம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவரின் மகன் சுப்பிரமணி என்கிற பிரகாஷ்;

–– ஆகியோர் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

28.11.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், கொழுந்திராம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. சிமியோன் என்பவரின் மனைவி லூர்துமேரி மற்றும் மகள் மகிமை மேரி;

–– ஆகியோர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

26.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், ஏகாட்டூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணன் என்பவரின் மனைவி கலாவதி

மற்றும் செய்யூர் வட்டம், தென்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மனைவி மல்லிகா;

30.11.2015 அன்று சென்னை, பெரம்பூரைச் சேர்ந்த திரு சம்பத்குமார் என்பவரின் மனைவி லட்சுமி;

–– ஆகியோர் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் தற்போது பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **9** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**